Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 99/2024**

DATE : 02.06.2026

Depositions of witness for Prosecution

PW: 5

| | | | |
|---|---|---|---|
| Name | மருத்துவர் திருமதி ஆனந்தி | Caste | |
| Father/Husband's Name | கர்ணன் | Calling | மருத்துவர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02 th day of June 2026

**(2 வது எதிரி ஆஜர். 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு ஜெயகணேஷ் ஆஜர்)**

**சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது மதுரை மாவட்டம் மேலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 27.08.2017 அன்று வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த பொழுது இரவு 10.05 மணிக்கு பாலக்கருப்பன் என்பவர் அவரை அடையாளம் தெரிந்த 5 மற்றும் 6 நபர்கள் அருளால் மற்றும் கையால் அவருடைய வீட்டுக்கு அருகில் வைத்து இரவு 09.30 மணிக்கு தாக்கியதாக சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதனை செய்து பார்த்த பொழுது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. (1) சிதைந்த காயம் 10x5x1 CM அளவில் இடது மணிக்கட்டில் காணப்பட்டது (2) சிதைந்த காயம் 20x1 CM அளவிலான காயம் இடது தோள்பட்டையில் காணப்பட்டது. (3) சிதைந்த காயம்

3x1x1 CM அளவிலான காயம் வலது பெருவிரல் மற்றும் ஆள்காட்டி விரலுக்கு இடையே காணப்பட்டது. அவருக்கு முதல் சிகிச்சை அளித்துவிட்டு மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து வைத்தேன். மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து காயம்பட்ட நபருக்கு கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் அதனை அனுசரித்து நானும் காயம்பட்ட நபருக்கு கொடுங்காயம் என்று விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று வழங்கினேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

காயப்பட்ட நபர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வரும்பொழுது சுயநினைவுடன் தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான். சிகிச்சைக்கு வரும்பொழுது காயம்பட்ட நபர் அவரை 5 முதல் 6 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள 3 வது காயமானது ஒரு நபர் கூர்மையான கண்ணாடி போன்ற பொருளின் மீது தன்னிச்சையாக கையை அழுத்தினால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் வாய்ப்புள்ளது. முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள 2 வது காயமானது ஒரு நபர் கண்ணாடி போன்ற கூர்மையான பொருள் மீது விழுந்து உருண்டால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் வாய்ப்பு குறைவு தான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு